16th March 1954]

(b) how many persons were injured; and how many died; and

(c) the relief measures taken by the State Government apart from those taken by the Central Government?

THE HON. DR. U. KRISHNA RAO :—" The attention of the hon. Member is invited to the paper[a] placed on the table of the House which contains all the particulars required."

* 202 *Q.*—SRI M. NARAYANA KURUP :—" Sir, I request that this question may be taken up to-morrow."

MR. SPEAKER :—" All right."

Discrimination in regard to wages paid to workers of the East India Distilleries and Sugar Factories, Nellikuppam.

* 203 *Q.*—SRI T. S. ARDHANARI : Will the Hon. the Minister for Industries and Labour be pleased to state—

(a) whether the Government have received any representation from the East India Distilleries and Sugar Factories Workers' Union, Nellikuppam, regarding the disparity in respect of wages, dearness allowance, bonus, etc., paid to the employees entertained before and after 1943 by the management of the East India Distilleries and Sugar Factories, Limited; and

(b) if so, what action the Government have taken or propose to take in the matter?

THE HON. DR. U. KRISHNA RAO :—" (a) & (b) The attention of the hon. Member is invited to the answer to the Short Notice Starred Question No. 297 F answered in the Legislative Assembly on 5th January 1954."

MR. SPEAKER :—" Questions over."

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—POINT OF ORDER *RE* THE USE OF THE EXPRESSION ' BLUFF '.

* **SRI M. KALYANASUNDARAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே. 11-15 a.m.
நேற்று பிற்பகல் உதவி சபாநாயகர் அவர்கள் தலைமை வகித்து சபையை நடத்திக் கொண்டிருந்தபோது ஒரு துரதிருஷ்டமான நிகழ்ச்சி நடந்தது. அந்த நிகழ்ச்சி இந்தச் சபையின் கௌரவத்திற்கே குறைவானது என்பது என்னுடைய அபிப்பிராயம். எனது நண்பர் ஸ்ரீ கே. பி. கோபாலன் பேசிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் சர்க்காரின் பேரில் சில குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள். அந்த சமயத்தில் **' Leader of the House '** இரண்டு மூன்று முறைகள் குறுக்கிட்டார்கள். குறுக்கிட்டதோடு நிற்காமல் கனம் கோபாலனைப் பார்த்து நீங்கள் சொல்வது முற்றிலும் **' bluff '** என்ற ஆங்கில வார்த்தையை உபயோகப்படுத்தினார்கள். **Bluff** என்று சொன்னால் நான் அறிந்த மட்டும், ' நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள்,' என்றுதான் அவர் சொன்னதாக நான் பொருள் கொள்ள முடியும். ஸ்ரீ கே. பி. கோபாலன் சொன்ன குற்றச் சாட்டுகள் எல்லாம் பொய்யாகவே இருந்தாலும், அவைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி

[a] Printed as Appendix II on page 341 infra.

சின்னாபின்னப் படுத்துவதற்கு, **Leader of House**-க்கு நிறைய சந்தர்ப்பம் பின்னேயிருக்கிறது. இருந்தும் நண்பர் ஸ்ரீ கே. பி. கோபாலன் பேசும்போதே குறுக்கிட்டு, '**pure bluffing**,' என்று சொன்னார். அம்மாதிரி அவர் சொன்னது சபை ஒழுங்குக்கு உட்பட்டதா இல்லையா என்பதை சபா நாயகர் விளக்கவேண்டுமென உடனே ஸ்ரீ எஸ். டி. ஆதித்யன் ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்பினார். '**Bluffing**' என்ற வார்த்தையின் பொருள் தங்களுக்கும் தெரியும் எனக்கும் தெரியும். அது சபை ஒழுங்குக்கு உட்பட்டதல்ல என்று ஒரு மாகாணத்தில் **ruling** கொடுத்திருக்கிறார்கள். ஓரிடத்தில் அது சரியானது என்றே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நாம் வார்த்தையின் பொருளை மட்டும் பார்த்து ஒரு முடிவுக்கு வருவது சரியல்ல. அதை உபயோகித்தவர், அவர் அதை உபயோகித்த சமயம், அவர் எந்த அர்த்தத்தை கருத்தில் கொண்டு உபயோகித்திருப்பார் என்பதையெல்லாம் பார்ப்பதும் ரொம்பவும் அவசியமாகும். அதை உபயோகித்தவர் நமது '**Leader of the House**' ஆவார். சர்க்கார் பேரில் யார் குற்றம் சாட்டினாலும் அவைகள் எல்லாவற்றையும் பொய் என்று தனது வாய் பயமுறுத்தலாலேயே அடித்துவிடுவது அவருடைய நோக்கம். ஸ்ரீ கே. பி. கோபாலன் சொல்லியது பொய் என்று அவரை இழுவு படுத்தும் நோக்கத்தோடு தான் அந்த வார்த்தையை உபயோகித்திருக்கிறார். அது சபை ஒழுங்குக்கு உட்பட்டதான பேச்சு அல்ல."

MR. SPEAKER :—" எதிர்க் கட்சித் தலைவர் கூட பேசவேண்டும். சீக்கிரமாக முடியுங்கள்."

* **SRI M. KALYANASUNDARAM**:—"இதோ நான் முடித்து விடுகிறேன். உபயோகப்படுத்திய வார்த்தை ஒழுங்கானதா ஒழுங்கற்றதா என ஸ்ரீ ஆதித்யன் எழுப்பிய ஒழுங்குப் பிரச்னைக்கு பதில் சொல்ல உதவி சபாநாயகர் அவர்கள் சற்றுத் தயங்கினார்கள். நானும் எதுவும் பேசாமல் இருந்தேன். ஆனால் மற்றொரு அங்கத்தினர், உதவி சபா நாயகர் அவர்களுடைய தீர்ப்பைச் சொல்லுமாறு வற்புறுத்தவே, உதவி சபாநாயகர் அவர்கள் அது ஒழுங்கானதா, ஒழுங்கற்றதா, என்று தீர்மானமாக தெரியாவிட்டால் நாளைக்கு அதன் முடிவைச் சொல்லுகிறேன் என்று சொல்லியிருக்கலாம். அப்படிச் சொல்லாமல் அவசரப்பட்டுக்கொண்டு, அது சபை ஒழுங்குக்கு உட்பட்டதான வார்த்தைதான், என **ruling** கொடுத்து விட்டார்."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" சபா நாயகர் அவர்களே, உதவிசபா நாயகர் அவசரப்பட்டுக் கொண்டு, 'அது சபை ஒழுங்குக்கு உட்பட்டதான வார்த்தை தான்,' என்று **ruling** கொடுத்துவிட்டார், என்று கனம் அங்கத்தினர் சொல்வது சரியா ? "

MR. SPEAKER :—" அவசரப்பட்டுக்கொண்டு **ruling** கொடுத்து விட்டார் என்று நீங்கள் சொல்லக்கூடாது. அவர் நன்றாக யோசித்தேதான் சொல்லியிருப்பார்."

* **SRI M. KALYANASUNDARAM** :—" நான் அதை ஒத்துக் கொள்ளுகிறேன். நன்றாக யோசித்தே அவர் அம்மாதிரி தீர்ப்பு அளித்தார் என்று சொன்னால் அது இன்னும் அபாயகரமானதாகும். ஆகவே நான் தங்கள் முடிவான தீர்ப்பை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்."

SRI K. VINAYAKAM :—" Sir, we have already . . . "

MR. SPEAKER :—" This is not a debate. There is no motion before the House. The hon. Member simply wants to ventilate a grievance. The hon. the Leader of the Opposition wants to say something. Afterwards, I shall give my ruling in the matter."

SRI V. BALAKRISHNAN :—" On a point of order, Sir."

MR. SPEAKER :—" I shall call the hon. Member afterwards."

16th March 1954]

* SRI P. RAMAMURTHI :—" இதிலே முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம் ஒரு அங்கத்தினர் பேசும்போது, **Leader of the House** எழுந்திருந்து, **you are bluffing** என்று சொன்னால் அதன் உண்மையான பொருள் என்னவென்று தான் பார்க்க வேண்டும்."

MR. SPEAKER :—" நேற்று தாங்கள் சபையில் இருக்கவில்லை போலிருக்கிறதே ? "

* SRI P. RAMAMURTHI :—" நான் இல்லாவிட்டாலும்கூட சபையில் என்ன நடந்தது என்பதைப்பற்றி இங்குள்ளோரிடம் பூராவாகக் கேட்டுத் தெரிந்துகொண்டேன். ஸ்ரீ கே. பி. கோபாலன் பேசும்போது, கனம் சுப்பிரமணியம் அவர்கள் குறுக்கிட்டு, **you are bluffing** என்று சொன்னால், நீங்கள் என்ன சொல்லுகிறீர்களோ அவைகள் யாவும் சரியல்ல என்று உங்களுக்கே தெரியும். இருந்தும் நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள் என்று பொருள்படத்தான் அவர் சொல்லியிருக்கிறார். இதுமாதிரியாக '**bluffing**' என்று ஒருவர் பேசும்போது இந்தச் சபையில் மிகவும் பொறுப்பு வாய்ந்த ஒருவர், அதுவும் **Leader of the House** பேசுவது, ' இந்தச்சபை ஒழுங்குக்கு உகந்ததானது அல்ல. அது சபை நடவடிக்கைக்கும் ஒழுங்கானது அல்ல,' என்பதே இப்பொழுதுள்ள பிரச்னை."

MR. SPEAKER :—" The Speaker is not an appellate Judge. I want to make this position clear. Whoever may occupy the Chair, he has the powers of the Speaker. There is no appeal from the Deputy Speaker to the Speaker. I will give an example. Suppose the Speaker is absent and the Deputy Speaker is also absent, and an hon. Member from the panel of Chairmen is occupying the Chair on a particular day. He has full powers as the Speaker and can give his own ruling. There is no appeal against his ruling to the Speaker. I will give another example. Suppose the Speaker is absent, the Deputy Speaker is absent and all the hon. Members of the Panel of Chairmen are also absent on a particular date. What will happen is, somebody will propose the name of an hon. Member which will be seconded by another hon. Member and he will be elected to occupy the Chair on that date. Now, he is free and competent to give his own ruling on that day, while occupying the Chair. His ruling cannot be taken in appeal to the Speaker. The Speaker should not be considered to be an appellate authority. An appeal does not lie to the Speaker against any ruling given by the Deputy Speaker or an hon. Member from the Panel of Chairmen or any other hon. Member, while occupying the Chair. 11-20 a.m.

" Regarding the use of certain of these words, I want to give one or two examples. Hon. Member Sri Kalyanasundaram has himself said that opinions differ. Take for instance the word ' nonsense '. I remember Speaker Galley has ruled that expression to be unparliamentary, while another Speaker has ruled it to be parliamentary. Then, take the word 'humbug '. One Speaker, I think, Mr. Whitley, has said that it is unparliamentary whereas another Speaker has said that it is parliamentary. So, it is all a matter of opinion. It all depends upon how the words have been used, the circumstances in which they have been used and the force with which they have been used. All these things have to be

taken into consideration. I again want to make the position clear by reiterating that there is no appeal from the Deputy Speaker or from any other hon. Member who may be occupying the Chair, to the Speaker.

" Apart from the above, I wish to give another example. In England, when the Speaker is absent, the reason for his absence is given to the House. Then the Deputy Speaker can give a ruling regarding a closure motion. Then only the Deputy Speaker has power to act. But here the position is different. The Speaker as well as the Deputy Speaker has been elected by the House. So the Deputy Speaker has the same power as the Speaker while occupying the Chair. I think I have made the position clear. The practice obtaining in England is this. If the Speaker is absent on a particular day, the House must be informed of the reasons for his absence. If the House is not informed of the reasons for his absence, the Deputy Speaker, while occupying the Chair, has no power to accept a closure motion. Only when the reason for the Speaker's absence is announced in the House, the Deputy Speaker has power to accept a closure motion as well as amendments. As I have made the position clear, I hope no hon. Member will rise to speak on this subject any further."

AN HON. MEMBER :—" What is the reason given by you, Sir? "

MR. SPEAKER :—" The reason is that there is no appeal whatsoever to the Speaker from the Deputy Speaker. The ruling given by the Deputy Speaker holds good."

SRI S. SWAYAMPRAKASAM :—" Sir, it need not be considered in the form of an appeal to you."

*** SRI M. KALYANASUNDARAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, உதவி சபாநாயகர் அவர்கள் கொடுத்த தீர்ப்பின்மேல் தங்களிடத்தில் அப்பீல் செய்துகொள்ள முடியாது என்பது எனக்கு நன்கு தெரியும். நம்முடைய சபைக்கும், பிரிட்டிஷ் பார்லிமெண்டிற்கும் பலவகையில் ஒற்றுமை இருப்பது போலவே பல விஷயங்களில் ஒற்றுமை யில்லையென்பது உண்மை. ஆனால் அங்கு ஒரு உரிமை இருக்கிறது. அதாவது ஸ்பீக்கர் கொடுத்த தீர்ப்பின்மேல் அப்பீல் செய்துகொள்ள வழியில்லாவிட்டாலும்கூட சபையில் ஒரு மோஷன் கொண்டுவந்து அதைப் பற்றி சபையிலுள்ளோர் விவாதிக்க சந்தர்ப்பம் இருக்கிறது."

MR. SPEAKER :—" தயவுசெய்து தாங்கள் என்னுடைய அறைக்கு வாருங்கள். மோஷன் ஏதாவது இருந்தாலும் எடுத்து வாருங்கள். **Leader of the House**-ம் வருவார். நாம் இங்கே பகிரங்கமாக விவாதிப்பதைவிட தனியாக கலந்து பேசி ஒரு முடிவுக்கு வருவோம்.

" As far as today is concerned, the matter is closed. Let the hon. Member Sri Kalyanasundaram come to my room. I shall look into the matter and see what can be done. I shall also call the Hon. Leader of the House to my room at that time. Let us go into the matter and see what can be done.

16th March 1954] [Mr. Speaker]

"Now, let us resume discussion on the Demand that was considered yesterday."

SRI V. BALAKRISHNAN :—"Sir, what about the Hon. Speaker's promise to hear my point of order?"

MR. SPEAKER :—"What is the point of order of the hon. Member?"

SRI V. BALAKRISHNAN :—"As the Hon. Speaker has been pleased to promise to hear my point of order, I only want to exercise that right. The point of order that I wished to raise had been embodied and is involved in the decision just now given by the Hon. Speaker with regard to the regrettable incident that occurred yesterday. As the subject-matter of my point of order is the same as the one contained in the Hon. Speaker's decision, the need for my point of order has been obviated."

III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1954–55.

(1) DEMAND IX—HEAD OF STATE, MINISTERS AND HEADQUARTERS STAFF—*cont.*

MR. SPEAKER :—"This Demand was discussed for 1½ hours yesterday. The House can discuss this Demand for an hour and a half today. I will call the Hon. Minister at about 12-30 to reply to the Demand. Now, hon. Member Sri Ramalingam may speak."

*SRI S. RAMALINGAM :—"கனம் சபா நாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள், மந்திரிகள், இன்னும் சர்க்கார்த் தலைமை அதிகாரிகள், இவர்களுடைய சம்பள மான்யக் கோரிக்கையின் மீது நான் ஒரு வெட்டுப் பிரேரணையைக் கொடுத்திருக்கிறேன். மந்திரிகளுடைய எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்றும், நிர்வாகச் செலவைக் குறைக்க வேண்டும் என்பதற்காகவும் நான் அந்த வெட்டுப் பிரேரணையைக் கோருகின்றேன். 11-26 a.m.

"எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர்களில் பலர் பேசும்போது, ஆந்திர ராஜ்யம் பிரிவதற்கு முன்னால் 15 மந்திரிகள் வரையில் இருந்தார்கள்; இப்பொழுது 12 மந்திரிகள் இருக்கிறார்கள்; இவ்வளவு அதிகமான மந்திரிகள் நம்முடைய ராஜ்யத்திற்குத் தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். துண்டு விழக்கூடிய வரவு செலவுத் திட்டத்தை (**Deficit budget**) தயாரித்து, சபை முன்பு சமர்ப்பித்து இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட காலத்திலே பல புதிய புதிய வரிகளைப் போட்டு, துண்டு விழக்கூடிய தொகையை சரிக்கட்டுவதற்காக முயற்சி செய்துகொண்டிருக்கும் இந்த சமயத்தில், 12 மந்திரிகளைக் கொண்ட ஒரு மந்திரி சபை தேவையில்லை; மந்திரிகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ளலாம் என்று பேசியிருக்கிறார்கள்.

"அதோடுகூட, நம்முடைய சர்க்கார் தலைமைக் காரியாலயத்தில் (**Chief Secretariat**) இருக்கக்கூடிய ஸ்தாபனத்திற்கு அதிகமான செலவு நடந்துகொண்டிருப்பதை இந்த பட்ஜெட் மெமொராண்டத்திலிருந்தும் சர்க்கார் கொடுத்திருக்கின்ற பிரசுரங்களிலிருந்தும் சில விவரங்களை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இந்த வருஷத்தில் ரெவினியூவிலிருந்து 45 கோடி ரூபாய் செலவு செய்வதற்கு மான்யங்கள் கோரப்படுகின்றன. அதே சமயத்தில் இந்த செலவினங்கள் பூராவிலும் சர்க்கார் அதிகாரிகள் சம்பளச் செலவுகள், அவர்களுக்குப் பஞ்சப்படி, போக்குவரத்து செலவு, இவைகளுக்காக 18½ கோடி ரூபாய் செலவு செய்